

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.11.2025) பாரா வாள்வீச்சு வீராங்கனை செல்வி ஷராந்தி தாமஸுக்கு சர்வதேச போட்டியில் பங்கேற்க தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 1,64,500 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர்.அசோக் சிகாமணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் 21.11.2025 முதல் 30.11.2025 வரை நடைபெறவுள்ள உலக சீனியர் கிக் பாக்சிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கவுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 11 வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து தலா 1.75 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 19.25 லட்சம் ரூபாய்க்கான காசோலையை நேற்று முன்தினம் (5.11.2025) வழங்கி கலந்துரையாடினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர்.அசோக் சிகாமணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.11.2025) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியைச் சேர்ந்த தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற 5 கூடைப்பந்து வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்க, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து மொத்தம் 2.75 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமீபத்தில் பஹ்ரைனில் நடைபெற்ற 3 ஆவது ஆசிய இளையோர் பளுதூக்குதல் விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர் அ.மஹாராஜனுக்கு நேற்று முன்தினம் (5.11.2025) 25.00 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கி பாராட்டு தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும்

# 363 மாணவர்களுக்கு ஊக்கத்தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.7-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.11.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் நடத்தப் படும் அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வரம், திவ்ய பிரபந்த பாடசாலை மற்றும் வேத ஆகம பாடசாலை ஆகிய 18 பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாக பயிற்சி பெறும் 297 மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை ரூ.10,000/ மற்றும் பகுதி நேரமாக பயிற்சி பெறும் 66 மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக் கத்தொகை ரூ.5,000/ ஆகியவற்றை வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர் களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகைக் கான வங்கி வரைவோலைகளை வழங்கினார்.**

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் வழிபாட் டுத் தலங்களாக மட்டுமல்லாமல், சமூக நோக் கத்தோடு செயல்படும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில், திருக்கோயில்கள் சார்பில் கல்வி நிறுவ னங் கள், பயிற்சி பள்ளிகள், கருணை இல்லங்கள், மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்கள், மன நலக் காப்பகம், மருத்துவ மையங்கள் போன் றவை நடத்தப்பட்டு வருகின்றன.

திருக்கோயில்கள் சார்பில் 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள், 6 ஓதுவார் பயிற்சிப் பள் ளிகள், 3 தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகள், 2 வேத ஆகம பாடசாலைகள், ஒரு திவ்ய பிரபந்த பாடசாலை என 18 பயிற்சிப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள் ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் மாதந்தோறும் ஊக் கத்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2022 ஆம் ஆண்டுவரை முழுநேரமாக பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,000/மும், பகுதிநேர மாக பயிலும் மாணவர்களுக்கு ரூ.500/மும் வழங்கப்பட்டு வந்தது. 2022 – 2023 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி, முழுநேரம் மற்றும் பகுதிநேரம் பயிலும் மாண வர்களுக்கு ஊக்கத்தொகை முறையே ரூ.3,000/ மற்றும் ரூ.1,500/ ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க முன்னோடி திட் டத்தை கொண்டுவந்த முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன் னிட்டு, கடந்த 24.11.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகை முறையே ரூ.4,000/ மற்றும் ரூ.2,000/ ஆக உயர்த்தி வழங்கினார்.

2025 – 2026 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில், ”அனைத்து பயிற்சிப் பள்ளிகளில் முழுநேர வகுப்பு பயிலும் மாண வர்களுக்கு ஊக்கத்தொகையாக 2022ஆம் ஆண்டு வரை ரூ.1,000/ வழங்கப்பட்டு வந்தது. 2023ஆம் ஆண்டு முதல் ரூ.3,000/ஆகவும், 2024 ஆண்டு முதல் ரூ.4,000/ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் ரூ.10,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும். அனைத்து பயிற்சிப் பள்ளிகளில் பகுதி நேர வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத்தொ கையாக 2023ஆம் ஆண்டு முதல் ரூ.1,500/ ஆக வழங்கப்பட்டு வந்ததை, 2024ஆம் ஆண்டு முதல் ரூ.2,000/ஆக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் ரூ.5,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப் படும் அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ் வரம், திவ்ய பிரபந்த பாடசாலை மற்றும் வேத ஆகம பாடசாலை ஆகிய 18 பயிற்சிப் பள்ளிக ளில் முழு நேரமாக பயிற்சி பெறும் மாணவர்க ளுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை ரூ.10,000/ மற்றும் பகுதி நேரமாக பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக் கத்தொகை ரூ.5,000/ க்கான வங்கி வரைவோ லைகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் வழங்கினார்.

இதன்மூலம் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாக பயிற்சி பெறும் 297 மாணவர்கள், பகுதி நேரமாக பயிற்சி பெறும் 66 மாணவர்கள் என மொத்தம் 363 மாணவர்கள் பயன்பெறு வர்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலை மைச் செயலாளர் நா.முருகானந்தம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை. இரவிச்சந்திரன், திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.605 கோடியில்

# தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஆய்வு!

*நெல்லை.நவ.7-*

*நெல்லை மாவட்டம் 831 ஊரக குடியிருப்பு களுக்கு ரூ.605 கோடி மதிப் பில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.இத் திட்டப்பணிகளின் முன் னேற்றம் குறித்து சட்டப் பேரவை தலைவர் மு.அப் பாவு ஆய்வு மேற்கொண் டார்.*

*நெல்லை மாவட்டத் தில்,வள்ளியூர், இராதாபு ரம்,நாங்குநேரி, களக்காடு, சேரன்மகாதேவி,பாளை யங் கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 831 ஊரக குடி யிருப்புகளுக்கு ரூ.605 கோடி மதிப்பில் தாமிரப ரணி கூட்டுக்குடிநீர் திட் டப்பணிகள் நடைபெற்று வருகிறது.*

*இப்பணிகளின் முன் னேற்றம் குறித்து வள்ளியூர் எம்.எஸ்.மஹாலில் 05.11.2025 அன்று சட்டப் பேரவைத்தலைவர் மு.அப் பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலை மையில், மாவட்ட ஊராட் சித்தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ் முன்னிலையில் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிக ளுடன் ஆய்வு நடத்தினார்.*

*தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் 831 ஊரக குடியிருப்பு களுக்கு ரூ.605 கோடி மதிப் பில் நிதி ஒதுக்கீடு செய்து, தாமிரபரணி கூட்டுக்குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.வள் ளியூர் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட 18 ஊராட்சி களுக்கும்,இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட் பட்ட 27 ஊராட்சிகளுக் கும் வழங்கப்படவுள்ள குடி நீர் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட் டது. ஊராட்சி மன்ற தலை வர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் கலந்து கொண்டார்கள். குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்க ளுடன் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.*

*மேலமுன்னீர்பள்ளம் அருகில் தாமிரபரணி ஆற் றில் ஒரு நீர்சேகரிப்பு கிணறு அமைக்கப் பட்டுள்ளது. அங்கிருந்து சிங்கிகுளத்தில் அமைக்கப்பட்டுள்ள 22.79 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்தி கரிப்பு நிலையத்திற்கு தண் ணீர் கொண்டுவரப்பட்டு பரிசோதனை முடிவுற் றுள்ளன.*

*தொடர்ந்து,சிங்கிகுளம் சுத்திகரிப்பு நிலையத்தி லி ருந்து பிரண்டை மலையி லுள்ள 9.50 இலட்சம் லிட் டர் கொள்ளளவுள்ள முதலாவது தலைமை மேல் நிலை நீர்த்தேக்கத் தொட் டிக்கும் நீரேற்றம் செய்யப் பட்டுள்ளது.அங்கிருந்து 6.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தெற்கு வள்ளியூர் தலைமை மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு வெள்ளோட்டம் முடி வுற் றுள்ளது. தொடர்ந்து, இரா தாபுரம் தலைமை மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும் குடிநீர் கொண்டுசெல்வதற்கான வெள்ளோட்ட பணி கள் நடைபெற்று வருகிறது.மீத முள்ள பணிகளை இந்த மாத இறுதிக்குள் முடித்து குடிநீர் வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.*

*தங்கள் ஊராட்சி பகுதி களில் குடிநீர் திட்ட பணிக ளுக்கு ஊராட்சி மன்ற தலைவர்களும் முழு ஒத்து ழைப்புடன் மாவட்ட நிர் வாகத்துடன் இணைந்து குடிநீர் திட்டப்பணிகளை விரைவாக முடிக்க ஒத்து ழைப்பு நல்க வேண்டும்.*

*இவ்வாறு சட்டப்பேர வைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.*

*நிகழ்வில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், மேற்பார்வை பொறியாளர் கருப்பையா, நிர்வாக பொறியாளர்கள் இராமலெட்சுமி,கனகராஜ் இராதாபுரம் வட்டாட்சி யர் மாரிசெல்வம்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மனோகர், முருகன் (வள்ளி யூர்),அலெக்ஸ்,சாமுவேல் (இராதாபுரம்) மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ் கர்,ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,குடிநீர் வடி கால் வாரிய பணியாளர் கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் உட் பட பலர் கலந்து கொண் டார்கள்.*



சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (06.11.2025) நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இயற்கைவளங்கள்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் மற்றும் பரப்புரைகள் நடத்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பதற்கு தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.




சட்டமன்றத் தேர்தல் – வடக்கு மண்டலம், திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட 4 தொகுதிகளின் தேர்தல் பார்வையாளர்கள், பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் – 2, தகவல் தொழில்நுட்பக்குழு மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு, வாக்காளர்கள் சிறப்பு திருத்தம் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். உடன் சி.என்.அண்ணாதுரை.எம்.பி., திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜ், எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், ஆர்.எஸ்.ஆனந்தன், தொகுதிகளின் பொறுப்பாளர்கள் ரமேஷ், தாமரைச் செல்வன், எம்.நூருல்லா, டேம் டி.வெங்கடேசன், சம்பத்குமார் உட்பட பலர் உள்ளனர்.